11 OCT 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப்பல்கலைக்கழகம்- இலங்கை

மூன்றாம்வருடம் -முதலாம் அரையாண்டு

பொதுக் கலைமாணித் தேர்வு 2011-2012

ஆகஸ்ட்- செப்டம்பர் 2014

**TL 3102 தமிழ் இலக்கிய மரபில் பாரதியின் ஆக்கங்கள்**

**நேரம் -இரண்டு மணித்தியாலங்கள்**

முதலாம் பகுதியிலிருந்து ஒருவினாவுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக எல்லாமாக மூன்று வினாக்களுக்கு விடையளிக்குக.

## பகுதி ஒன்று

1. பாரதியின் வாழ்க்கை வரலாற்றைப் பின்வரும் விடயங்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.
   அ. சுயசரிதை
   ஆ. சித்தக்கடல்
   இ. ஏனைய ஆக்கங்கள் (40 புள்ளி)

2. தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவத்தைத் தோற்றுவித்தவர் பாரதி என்ற கூற்றினைப் பின்வரும் அடிப்படைகளில் விளக்குக.
   அ.பாரதியின் இலக்கிய நோக்கு
   ஆ.அவர் கையாண்ட இலக்கிய வடிவங்கள்
   இ. மொழிநடை
   (40 புள்ளி)

## பகுதி இரண்டு

3. "தமிழ்ப் பத்திரிகையுலகில் புதிய மாற்றத்தைத் தோற்றுவித்தவர் பாரதி" இம்மாற்றத்திற்குக் காரணமாக இருந்த சமூகச்சூழல் பற்றி எடுத்துக்கூறி அவர் தோற்றுவித்த மாற்றங்களை விளக்குக.? ( 30 புள்ளி)

4. பெண்விடுதலை ஏற்பட்டால் மட்டுமே தேசவிடுதலை சாத்தியமாகும். பெண்விடுதலை பற்றிய பாரதியின் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க. ( 30 புள்ளி )

5. பாரதியின் எழுத்துகளை அடிப்படையாகக்கொண்டு பின்வருவனவற்றுள் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக

   1. பாரதியின் கல்விச் சிந்தனை
   2. பாரதியின் சிறுகதைகள்
   3. தமிழ்மொழி வளர்ச்சிபற்றி பாரதியின் எண்ணங்கள்
   4. வர்க்கமும் சாதியமும்
   5. வசன கவிதை (30 புள்ளி)